DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC No. 2 /2019 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | மாலா |
| Father's /Husband Name | : | செந்தில்குமார் |
| Village | : | அண்டக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 33 |
| Occupation | : | தனியார் கடை ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day of June 2024.
R1, R4, R5 present. R2 died. R3 absent petition U/s 317 Cr. P. C filed and allowed.

**எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

திருமணத்தின்போது 1 ம் எதிர் மனுதாரருக்கு எங்கள் தரப்பில் வாங்கி கொடுத்த இருசக்கர வாகனம் தற்போது எங்கள் வீட்டிலுள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் எதிர் மனுதாரர்கள் கொடுமைப்படுத்தியதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு 1 ம் எதிர் மனுதாரர் தான் அனுமதித்தார் என்றால் சரிதான். எனக்கு பிறந்த குழந்தை 8 மாதத்திலேயே பிறந்தது என்றால் சரிதான். அந்த குழந்தை திருவாரூர் ரேவதி மருத்துவமனையில் பிறந்தது என்றால் சரிதான். அந்த பிரசவத்திற்கான செலவை 1 ம் எதிர் மனுதாரர் தான் செய்தார் என்றால் அவரும் செய்தார் எங்கள் வீட்டிலும் செலவு செய்தார்கள். குழந்தை 8 மாதத்திலேயே பிறந்ததால் போதிய மருத்துவ வசதி இல்லாத காரணத்தினால் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள் என்றால் சரிதான். அந்த மருத்துவமனையில் குழந்தை ஒரு மாத காலம் சிகிச்சையிலிருந்தது என்றால் சரிதான். குழந்தை மருத்துவமனையிலிருந்தபோது எதிர்மனுதாரர்களும் உதவிக்கு வந்தார்கள் என்றாலும் 1 ம் எதிர்மனுதாரரும் இரவிலிருந்து பார்த்துக்கொண்டார் என்றாலும் சரிதான். நான் எதிர்மனுதாரர்கள் மருத்துவமனையில் என்னை கவனிக்கவில்லை என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குழந்தை மருத்துவமனையிலிருந்தபோது 10 நாட்கள் மட்டுமே மருத்துவமனையில் இருந்தேன் என்றாலும், அதன்பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன்

என்றாலும் சரியல்ல. மருத்துவமனையிலிருந்து என்னையும் குழந்தையும் 1ம் எதிர் மனுதாரர் வீட்டிற்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். நான் 1 ம் எதிர் மனுதாரர் வீட்டில் குழந்தையுடன் 15 நாட்கள் மட்டுமே இருந்தேன் என்றால் சரிதான். எனது குழந்தையின் பெயர் சூட்டு விழா 1 ம் எதிர் மனுதாரர் வீட்டில் நடக்க வேண்டும் என்று கூறியபோது குழந்தையை நான் எனது பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச் சென்றேன் என்றால் சரியல்ல பெயர் சூட்டு விழர் 1 ம் எதிர் மனுதாரர் வீட்டில்தான் நடந்தது. நான் 1 ம் எதிர் மனுதாரர் வீட்டில் நடந்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெயர் சூட்டு விழா முடிந்த பிறகு 1 ம் எதிர் மனுதாரர் வீட்டிற்கு செல்லவேயில்லை என்றாலும் அவர்கள் வந்து அழைத்போதும் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிர் மனுதாரர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தபோது நான் அவர்களை அசிங்கமாக பேசி அவமதித்தேன் என்றால் சரியல்ல குழந்தை பிறந்த வீட்டிற்கு சென்ற பிறகு நீதிமன்றத்தில் வைத்துதான் எதிர் மனுதாரர்களை பார்த்தேன். நான் வரதட்சணை போதாமல் எதிர்மனுதாரர்கள் மேலும் வரதட்சணை கேட்டார்கள் என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் எங்கு நடந்தது என்றால் திருமருகல் வாசுகி திருமண மண்டபத்தில் நடந்தது. எதிர் மனுதாரர் செலவில் தான் திருமணம் நடந்தது என்றால் சரிதான். 2 ம் எதிர் மனுதாரரான எனது மாமனார் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர் என்றாலும் அவர் தற்போது இறந்து விட்டார் என்றாலும் சரிதான். 3 ம் எதிர்மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரரின் தாயார் என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் தான் 3 ம் எதிர்மனுதாரரான அவரது தாயாரை கவனித்து வருகிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 5 ம் எதிர் மனுதாரர் பிரபு எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான். 5 ம் எதிர்மனுதாரர் அவரை அனுசரித்து சென்றால் வாழலாம் என்றால் தவறாக நடக்க முயன்றதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4 ம் எதிர் மனுதாரர் பூந்தோட்டத்திலுள்ள அரசு பள்ளியில் தற்காலிக ஆசிரியராக பணிபுரிகிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிர் மனுதாரர்கள் எந்த கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு முன்பு திருப்பூரில் வேலை செய்தேன் என்றால் சரிதான். அங்கு கணக்கராக பணி செய்தேன். நான் நாகப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எதிர்மனுதாரர்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1 ம் எதிர் மனுதாரர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறார் என்றால் இல்லை ஊரக வளர்ச்சி துறையில் வேலை செய்கிறார் என்று சொன்னார்கள். அவர் குறைவான சம்பளத்திற்கு பணி செய்தார் என்றாலும் அவரது வயதான தாயாரை கவனித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர்

என்னுடன் தற்போதும் சேர்ந்து வாழ விருப்பத்துடன் உள்ளாரா என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.